# சிங்கப்பூரில் நடைபெற உள்ள ஐஐஎப்ஏ வீக் எண்டு 2012ல் முனைவர் கமல்ஹாசனின் விஸ்வரூபம் திரைப்படத்தின் முன்னோட்டம் திரையிடப்பட உள்ளது

சென்னை, மே 25:

முனைவர் கமல்ஹாசனின் இயக்கம் மற்றும் துணை தயாரிப்பில் உருவாகி உள்ள பெரும் எதிர்பார்ப்புக்குள்ளாகி இருக்கும் விஸ்வரூபம் திரைப்படத்தின் முன்னோட்டம் ஜூன் 2012ல் சிங்கப்பூரில் நடைபெற உள்ள 13-வது ஐஐஎப்ஏ வீக் எண்டு-ல் முதல் முறையாக திரையிடப்பட உள்ளது. தமிழ் மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளிலும் தயாராகி உள்ள கமல்ஹாசனின் இந்த பெரும் எதிர்பார்ப்புக்குள்ளாகி உள்ளாகி உள்ள திரைப்படம் இன்றைய நிலையில் மிகப் பெரிய பொருட்செல்வில் பெரும் வரைகலை அம்சங்களோடு உருவாக்கி உள்ளது.

விஸ்வரூப் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தி பதிப்பின் முன்னோட்டம் ரபல்ஸ் நகர கன்வென்ஷன் மையத்தில் ஜூன் 8ல் உலகளாவிய ஊடகத்தினருக்கான முதல்முறையாக வெளியிடப்பட உள்ளது. இன்னும் சில வாரங்களில் வீடியோகன் ஐஐஎப்ஒ வீக் எண்டு மற்றும் ஐஐஎப்ஏ விருதுகள் ஆசியாவின் மிகச் சிறந்த திரைப்பட விழாவை சிங்கப்பூரில் 2-வது முறையாக நடத்த உள்ளது.

முனைவர் கமல்ஹாசன், ராகுல் போஸ், ஆண்ட்ரியா ஜெர்மியா, பூஜா குமார், ஜெய்தீப் லாவத், சாம்ராட் சக்கரவர்த்தி, ஜெரினா வகாப் மற்றும் ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள சேகர்கபூரின் சிறப்பு தோற்றத்தோடு இந்தப் படம் உருவாகி உள்ளது. இத்திரைப்படத்திற்கு இசை நவீன மும்மூர்த்திகளான சங்கர் - ஏசன் - லாய் மற்றும் பிரபல கவிஞர் ஜாவீத் அக்தர் ஆவர். இந்நிகழ்வில் சகலகலா வல்லவன், உலக நாயகன் கமல்ஹாசன் படக்குழுவினரோடு ஊடகத்தினரை சந்திப்பார்.

முனைவர் கமல்ஹாசன் அவர்கள் ‘இந்திய திரைப்படத் துறையில் ஐஐஎப்ஏ ஒரு மிகப் பெரிய நிகழ்வாகும். இந்த ஆண்டு எனது திரைப்பட முன்னோட்டம் வெளியிடப்படுவதால் எனக்கு இது இன்னும் சிறப்பாக அமைந்துள்ளது. எனது திரைப்படத்தை இத்தகைய பெரிய அளவிலான சர்வதேச அரங்கில் வெளியிடுவது மிகச் சிறந்த வாய்ப்பாகும். விஸ்வரூபம் திரைப்படத்தின் முன்னோட்ட காட்சியை வெளியிடுவதை நான் ஆர்வத்தோடு எதிர்நோக்குகிறேன். மற்றும் அது சிறப்பான வரவேற்பை பெறும் என்று உறுதியாக நம்புகிறேன்’ என்று கூறுகிறார்.

சிங்கப்பூரில் உள்ள தென்னிந்திய மக்களை மனதில் கொண்டு ஐஐஎப்ஏ 13-ம் ஆண்டு வீடியோகான் ஐஐஎப்ஏ வீக் எண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தனது இந்திய - சிங்கப்பூர் ரசிகர்களுக்காக ஒரு சிறப்பு விருந்தினை படைக்க உள்ளது. உயர் உத்வேகம் கொண்ட இந்த மூன்று நாட்கள் தென்னிந்திய திரைப்பட விழாவில் பிரபல இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், பிரபல நடிகைகள் ராதிகா சரத்குமார், ஸ்ரேயா ஷரன், தெலுங்கு திரைப்பட தயாரிப்பாளர்கள் கே.எஸ். ராமாராவ், சுரேஷ் பாபு, அல்லுஅரவிந்த் மற்றும் பலர் பங்கேற்று 2011ம் ஆண்டின் இந்திய சினிமாவின் ஈடு இணையற்ற வெற்றிகளை கொண்டா உள்ளனர்.

ஆர்வமூட்டும் வகையில் தென்னிந்தியாவின் பிரபல நடன இயக்குனர் மற்றும் இயக்குனர் பிரபுதேவாவின் நடன அமைப்பில் ஐஐஎப்ஏ வீக் எண்டு மற்றும் விருதுகளின் ஐஐஎப்ஏ ராக்ஸ் மற்றும் விருதுகள் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. தனது வாழ்நாளில் விருதுகள் விழாவிற்கு நடன அமைப்பது பிரபுதேவாவிற்கு இதுவே முதல் முறையாகும்.

இந்த ஆண்டு ஜூன் 7 முதல் 9 வரையிலான தேதிகளில் சிங்கப்பூரின் லயன் சிட்டியில் வீடியோகான் ஐஐஎப்ஏ விருது வழங்கும் நடைபெற உள்ளது. மேலும் இந்த ஆண்டு நிகழ்வில் ஐஐஎப்ஏ வேர்ல்டு பிரீமியர், ஐஐஎப்ஏ ராக்ஸ், ஐஐஎப்ஏ பிலிம் மற்றும் மியூசிக் ஒர்க்ஷாப் மற்றும் சிறப்பு வாய்ந்த ஐஐஎப்ஏ விருதுகள் நடைபெற உள்ளன.

வீடியோகான் இன்டஸ்டிரீஸ் வழங்கும் வீடியோகான் ஐஐஎப்ஏ வீக் எண்டு நிகழ்வை ஒருங்கிணைப்பது விஸ்கிராப்ட் இன்டர்நேஷனல் எண்டர்டெய்ன்மென்ட் நிறுவனமாகும்.

மேலும் தொடர்புக்கு :
நிகில் முருகன்
nikilnikil@gmail.com
Cell : 9840077270